# J/PUTHUMADAM R.C.T.M SCHOOL MANIPAY

# யா/புதுமடம் றோ.க.த.க பாடசாலை மானிப்பாய்

## அதிபர் அறிக்கை

## PRINCIPAL'S REPORT

**16.11.2017**

# J/PUTHUMADAM R.C.T.M SCHOOL MANIPAY

# யா/ புதுமடம் றோ.க.த.க பாடசாலை மானிப்பாய்

## அதிபர் அறிக்கை

## PRINCIPAL'S REPORT

16.11.2017

# யா/புதுமடம் றோ.க.த.க.பாடசாலை

## மகுட வாசகம்

"கசடறக் கற்க"

## தூரநோக்கு

"சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்"

## நோக்கக்கூற்று

"தரமான கல்வியின் ஊடாக சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்"

# யா/புதுமடம் றோ.க.த.க பாடசாலை

# பரிசளிப்பு விழா – 2017

| | | |
|---|---|---|
| காலம் | : | 16.11.2017 (வியாழக் கிழமை) |
| நேரம் | : | பிற்பகல் 1.30 மணி |
| இடம் | : | பாடசாலை மண்டபம். |

**தலைவர்:**

திரு.சி.நேதாஜி

(அதிபர்)

**ஆசியுரை:**

**அருட்தந்தை S.J.Q ஜெயறஞ்சன் அடிகளார்:**

(மானிப்பாய் பங்குத்தந்தை)

**பிரதம விருந்தினர்**

**கௌரவ திரு.பா.கஜதீபன்**

(மாகாணசபை உறுப்பினர் வடமாகாணம் )

**சிறப்பு விருந்தினர்**

**திரு.த.மாதவன்**

(கோட்டக் கல்வி அலுவலகர்,உடுவில்)

**கௌரவ விருந்தினர்கள்**

**திரு.பா.மகாலிங்கசிவம்**

(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்(தமிழ்) வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம்)

**அருட்தந்தை S.J.Q ஜெயறஞ்சன் அடிகளார்**

(மானிப்பாய் பங்குத்தந்தை)

# பாடசாலைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| மாகாணம் | :- | வடக்கு |
| மாவட்டம் | :- | யாழ்ப்பாணம் |
| வலயம் | :- | வலிகாமம் |
| கோட்டம் | :- | உடுவில் |
| கிராமசேவையாளர் பிரிவு | :- | J/182 |
| பாடசாலை குறியீட்டு இலக்கம் | :- | 1010021 |
| பரீட்சை இல | :- | 11292 |
| தொகைமதிப்பீட்டு இலக்கம் | :- | 09205 |
| பாடசாலை வகை | :- | Type III |
| மொழிமூலம் | :- | தமிழ் |
| தர வகுதி | :- | தரம் 1-5 |
| பால் | :- | கலவன் பாடசாலை |
| சம்பளக் கணக்கிலக்கம் | :- | 0009481258<br>இலங்கை வங்கி,<br>சுன்னாகம் |
| F.F கணக்கிலக்கம் | :- | 109200180014958<br>மக்கள் வங்கி, சுன்னாகம். |
| SDA கணக்கிலக்கம் | :- | 109-1-00180065171<br>மக்கள் வங்கி, சுன்னாகம். |

# நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| ♣ விருந்தினரை அழைத்து வரல் | பி.ப 1.30 |
| ♣ தேசியக் கொடியேற்றல் | பி.ப 1.40 |
| ♣ பாடசாலைக் கொடியேற்றல் | பி.ப 1.45 |
| ♣ மங்கள விளக்கேற்றல் | பி.ப 1.55 |
| ♣ கிறிஸ்தவ கீதம் | பி.ப 2.00 |
| ♣ தேவாரம் | பி.ப 2.10 |
| ♣ வரவேற்புரை (செல்வி கோ. நவீனா) | பி.ப 2.15 |
| ♣ வரவேற்பு நடனம் | பி.ப 2.20 |
| ♣ ஆசியுரை | பி.ப 2.35 |
| ♣ அதிபர் அறிக்கை | பி.ப 2.45 |
| ♣ பரிசில் வழங்கல் | பி.ப 3.00 |
| ♣ கௌரவ விருந்தினர் உரை | |
| ♣ சிறப்பு விருந்தினர் உரை | |
| ♣ பிரதம விருந்தினர் உரை | |
| ♣ நன்றியுரை | |
| ♣ கலை நிகழ்வுகள் | |
| ♣ கொடி இறக்குதல் | |
| ♣ பாடசாலைக் கீதம் | |

# அதிபர் அறிக்கை

இன்றைய இனிய பொழுதினிலே இவ்விழாவை சிறப்புற நடாத்த வழிசெய்திருக்கும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி பாடசாலை அன்னைக்கும் பணிந்து இன்றைய பரிசளிப்பு விழா அறிக்கையை முன் வைக்கின்றேன்.

இன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.பா.கஜதீபன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் உடுவில் கோட்டக் கல்விஅலுவலகர் மதிப்பார்ந்த திரு.த.மாதவன் அவர்களே, இன்றைய விழாவை ஆசீர்வதித்து ஆசியுரை வழங்கியும் கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் அருட்தந்தை S.J.Q ஜெயறஞ்சன் அடிகளார், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம் திரு.பா.மகாலிங்கசிவம் அவர்களே, எமது பாடசாலையின் கல்வி முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்போடு பாடுபட்டுக் கொண்டிருக்கும் அன்பான ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, நலன்விரும்பிகளே, எதிர்காலத்தை மிளிரச் செய்யும் மாணவச்செல்வங்களே, அன்பான மதிப்பார்ந்த பெற்றோர்களே, உங்கள் அனைவருக்கும் உள்ளங்கனிந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடமாகாணசபை உறுப்பினர் கௌரவ திரு.பா.கஜதீபன் அவர்கள் இன்றையபொழுதினை எமக்காக ஒதுக்கி விழாவில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்றார் அவர் எமது பாடசாலைக்கு பல வழிகளில் பங்களித்துள்ளார். அவ் வகையில் கடந்த வருடம் இரண்டு கணினிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். முன்னை நாள் ஆசிரியரான இவர், வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சிமீது பேரார்வம் கொண்டு செயற்படுபவர். அவரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உடுவில் கோட்டக் கல்விஅலுவலகர் திரு.த.மாதவன் அவர்கள் கோட்டப் பாடசாலைகளைச் சிறந்த முறையில் நிர்வகித்து வருகிறார் பொறுப்புக்களை பொறுமை இழக்காது நிறைவேற்றும் உங்கள் வருகையையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

கௌரவ விருந்தினர்களாக சிறப்பித்துக் கொண்டிருக்கும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்(தமிழ்)வலயக் கல்வி அலுவலகம் வலிகாமம் ஈழத்து புலவர் பரம்பரையின் நீண்ட வரலாற்றைக்கொண்ட புலவர் திரு.தி.பார்வதிநாதசிவம் அவர்களின் மகனும் தமிழ் பாடத்தில் புலமைமிக்க பெருஆசான் முன்னாள் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு.பா.மகாலிங்கசிவம் அவர்கள் மற்றும் வணக்கத்திற்குரிய அருட்தந்தை *S.J.Q* ஜெயறஞ்சன் அடிகளார் எமது பாடசாலையின் தேவாலயத்தில் குருத்துவப் பணியையும்,சமூகப்பணியையும் சிறப்பாக ஆற்றிவருபவர் அவர் பணி சிறப்பாக அமைய வேண்டி அவர்களையும் வரவேற்று அகமகிழ்வடைகின்றோம்.

## எமது பாடசாலை

இப் பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையும் 38 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். வலிகாமம் கல்வி வலயத்தின் 50 மாணவர்களுக்கு குறைவான பாடசாலை வகைகளினுள் எமது பாடசாலையும் ஒன்றாகும். இருப்பினும் குடும்ப, கோட்ட போட்டிகளில் வெற்றியீட்டி சாதனை படைத்து வருகின்றோம்.

இவ் வருடம் தரம் 1,2,3,4,5, வகுப்புக்கள் முறையே திருமதி.வ.நவாஸ்சங்கர், செல்வி.த.தர்சினி, திருமதி.ரோ.கணபதிப்பிள்ளை, திருமதி.க.ரமேஸ்குமார், திருமதி.கே.விஜிந்தன் ஆகியோர் வகுப்பாசிரியர்களாக கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடன் திருமதி.ச.ரவிச்சந்திரன் 25.09.2017 இருந்து இடமாற்றம் பெற்று எமது பாடசாலையில் கடமையாற்றுகின்றார் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக செல்வி. ஜெ.லிசானுஜாவும் கடமையாற்றி வருகின்றார். திருமதி.சு.நாகபூசணன் 20.06.2017ல் இருந்து 04.08.2017 வரையும் தற்காலிக இணைப்பில் கடமையாற்றியுள்ளார்.

2017 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் நான்கு மாணவர்கள் 100 புள்ளிகளிற்கு மேலும் ஆறு மாணவர்கள் 70 புள்ளிகளிற்கு மேலும் பெற்றுள்ளனர்.அதிகூடிய புள்ளியாக செல்வன்.சு.பிரசாந் 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.இவருடன் செல்வி.கோ.நவீனா 138 புள்ளிகளையும்,102புள்ளிகளை முறையே செல்வன்.ஜெ.கின்ஸ்ரன், செல்வி.ப.சார்மி ஆகியோர் பெற்றுள்ளனர்.இவர்களிற்கு கற்பித்த ஆசிரியர்களிற்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு இங்கு வருகை தந்து எங்களைக் கௌரவப்படுத்தியுள்ள அனைவரும் நன்றிக்குரியவர்கள். உங்கள் ஒவ்வொருவரினதும் வருகையாலும் பெருமகிழ்வுறுவதோடு உங்களின் வழிகாட்டல்கள், ஆலோசனைகள், சேவைகள் உதவிகள் என்றைக்கும் எமது பாடசாலையை வளப்படுத்தும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

இந்தக் கிராமத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள சில பழைய மாணவர்கள் பாடசாலையோடு மிக நெருக்கமான உறவைப் பேணுபவர்கள். அவர்கள் தாங்களும் தங்கள் புலம் பெயர் உறவுகள் மற்றும் நண்பர்கள் மூலமாகவும்,பாடசாலையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்கள்.எல்லோரது அரவணைப்பாலும் மிளிரும் இப் பாடசாலை எதிர்காலத்தில் இன்னுமின்னும் சிறப்புக்களோடு உயர்ந்து நிற்கும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

இணைப்பாட விதானப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டி சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டுவதோடு இவர்களிற்கான அனைத்து வழிப்படுத்தல்களையும் ஏற்பாடுகளையும் செய்துதவிய ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுதலுக்குரியவர்கள்.மேலும் மாணவர்களின் நலனோம்பு நிகழ்ச்சிகளிலும் பலவிதமான போட்டிகளிலும் மாணவர்களைப் பங்கு பெற வைப்பதோடு அவர்களின் கல்விச் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு மேலதிக கல்விச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி வேலைகளிலும் மேலதிக

நேரங்களிலும் கூட அரும்பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அனைத்து ஆசிரியர்களையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டிக் கொள்கின்றேன்.

பாடசாலை அபிவிருத்திக் குழு பழைய மாணவர் சங்கம் ஆகிய பாடசாலையின் செயற்படுகின்ற இரு அமைப்புக்களும் அதன் உறுப்பினர்களும் கல்வி, பௌதீக அபிவிருத்திகளில் பங்காற்றுபவர்களாக விளங்குவதோடு பாடசாலைகளின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் வளர்ச்சி நிலைகளிலும் மிகவும் பக்க துணையாக நின்று அரும்பணியாற்றுகின்றார்கள்.இவர்கள் அனைவரும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

அத்தோடு உதவிகளை வழங்கிய புதுமடம் கிராம அபிவிருத்தி அமைப்பு, பழைய மாணவ சங்கம், புதுமடம் கர்த்தர் ஆலய நிர்வாகத்தினர், மற்றும் இன்றைய விழாவிற்கு ஒலிபெருக்கி சாதனம் வழங்கியவர் திரு.R.B அமல்ராஜ், CAKE வழங்கியுதவியவர் சுதுமலை சுபா வெதுப்பக உரிமையாளர் திரு. S. பேரின்பநாயகம் அவர்களிற்கும் மேடை அமைப்பை வழங்கியுதவிய திரு.ம.கரன் அவர்களிற்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பரிசளிப்பு விழாவிற்கு வருடாந்தம் நிதி உதவி செய்யும் பழைய மாணவர்கள் விபரம். (33000/- வழங்கியோர் விபரம்)

### பெற்றோர்கள்.

- அமரர் திரு. திருமதி. பாலுபாக்கியம்
- அமரர் திரு. வல்லிபுரம் வைத்தியலிங்கம்
- அமரர் திரு. மோசெஸ்
- திருமதி. ராசாத்தி மோசெஸ்

### பிள்ளைகள்.

**தகமை பரிசு வழங்கும் பழைய மாணவர்கள் விபரம்**

- திரு. திருமதி. பாலுசிறிதரன் குடும்பம் (France)
- திரு. திருமதி. மோசெஸ் குடும்பம் (France)
- திரு. திருமதி. வைத்திலிங்கம் யோகம்மா
- திரு. திருமதி. மோசெஸ் இமானுவெல் குடும்பம் (France)

**பெற்றோர் ஞாபகார்த்தமாக பாடசாலையின் புலம்பெயர்ந்த பழையமாணவர்கள் பரிசளிப்பு விழாவிற்கு வகுப்புரீதியாக வருடாந்தம் முதல் மூன்று இடம் பெறும் மாணவர்களிற்கு வழங்கப்படும் பணப்பரிசில் விபரம். 2016**

| இல | மாணவர் பெயர் | தரம் | நிலை | பணத்தொகை |
|---|---|---|---|---|
| 01 | செல்வன்.நி.அஸ்வின் | 01 | 01 | 3000.00 |
| 02 | செல்வி.ப.அன்பினி | 01 | 02 | 2000.00 |
| 03 | செல்வன்.ஜெ.அனோஜன் | 01 | 03 | 1000.00 |
| 04 | செல்வி.ச.டிசாளினி | 02 | 01 | 3000.00 |
| 05 | செல்வி.ப.கஸ்மி | 02 | 02 | 2000.00 |
| 06 | செல்வி.கி.கிசானி | 02 | 03 | 1000.00 |
| 07 | செல்வன்.வி.டெனிஸ்ரன் | 03 | 01 | 3000.00 |
| 08 | செல்வி.யு.வைஸ்ணவி | 03 | 02 | 2000.00 |
| 09 | செல்வி.றோ.வினுசிகா | 03 | 03 | 1000.00 |
| 10 | செல்வன்.சு.பிரசாந் | 04 | 01 | 3000.00 |
| 11 | செல்வி.கோ.நவீனா | 04 | 02 | 2000.00 |
| 12 | செல்வன்.ஜெ.கின்ஸ்ரன் | 04 | 03 | 1000.00 |
| 13 | செல்வன்.ப.அபினாஸ் | 05 | 01 | 3000.00 |
| 14 | செல்வி.க.டிவின்ஜா | 05 | 02 | 2000.00 |
| 15 | செல்வி.சு.ரிஜசாளினி | 05 | 03 | 1000.00 |

## நன்றிக்குரியவர்கள்

இன்றைய விழாவிற்கு பல வேலைகளின் மத்தியில் சிரமத்தையும் பொருட்படுத்தாது கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பிரதம விருந்தினர் கௌரவ திரு.பா.கஜதீபன் மாகாணசபை உறுப்பினர், சிறப்பு விருந்தினர் கோட்டக்கல்வி அலுவலகர் திரு.த. மாதவன், கௌரவ விருந்தினர்கள் திரு.பா.மகாலிங்கசிவம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம், மற்றும் ஆசியுரை வழங்கிய மானிப்பாய் பங்குத்தந்தை S.J.Q ஜெயறஞ்சன் அடிகளார் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

இன்றைய விழாவை சிறப்பாகக் கொண்டாட பரிசில்களையும் அன்பளிப்புக்களையும் வழங்கியோர், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களிற்கும் அன்பளிப்பு வழங்கியோர் மற்றும், மாணவர்களிற்கு பரிசுப்பொருட்கள், வழங்கிய பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்றைய நிகழ்வுகள் வெற்றி பெற உதவிய எமது பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், மாணவர்களிற்கான ஆங்கில நிகழ்ச்சிகளை பயிற்றுவித்த ஆங்கில ஆசிரியர் ஜெகதீஸ்வரன் லிசானுஜா, ஏனைய நிகழ்வுகளை வழங்கிய வகுப்பாசிரியர்கள், பெற்றோர்கள், கலைநிகழ்வுகளை பயிற்றுவித்து வழங்கிய திருமதி.நி.சிந்துஜா, திருமதி.க.சுமித்திரா, அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

# நவராத்திரி விழாவிற்கு பரிசில்கள் பெறுவோர் விபரங்கள் 2017

## தேவாரப்போட்டி

| இல | மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 01 | நி.லிபினா | 01 | 01 |
| 02 | ச.சணால் | 01 | 02 |
| 03 | கோ.சாச்விகன் | 01 | 03 |
| 04 | ப.அன்பினி | 02 | 01 |
| 05 | ஜெ.அனோஜன் | 02 | 02 |
| 06 | நி.அஸ்வின் | 02 | 03 |
| 07 | ச.டிசாளினி | 03 | 01 |
| 08 | ஸ்ரீ.கிசானி | 03 | 02 |
| 09 | ப.கஸ்மி | 03 | 03 |
| 10 | வி.டெனிஸ்ரன் | 04 | 01 |
| 11 | சு.லதுசன் | 04 | 02 |
| 12 | வ.பவிஸ்ணா | 04 | 03 |
| 13 | சு.பிரசாந் | 05 | 01 |
| 14 | கோ.நவீனா | 05 | 02 |
| 15 | கி.கிசாந்தன் | 05 | 03 |

## கோலப்போட்டி

| இல | மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 01 | ச.சணால் | 01 | 01 |
| 02 | நி.லிபினா | 01 | 02 |
| 03 | கோ.சாச்விகன் | 01 | 03 |
| 04 | நி.அஸ்வின் | 02 | 01 |
| 05 | ஜே.அனோஜன் | 02 | 02 |
| 06 | ச.டிசாளினி | 03 | 01 |
| 07 | ஸ்ரீ.கிசானி | 03 | 02 |
| 08 | அ.அபிசன் | 03 | 03 |
| 09 | ற.சஜீவினி | 04 | 01 |
| 10 | வி.டெனிஸ்ரன் | 04 | 02 |
| 11 | றோ.வினுசிகா | 04 | 03 |
| 12 | ப.சார்மி | 05 | 01 |
| 13 | கோ.நவீனா | 05 | 02 |
| 14 | ச.டிலஸ்காந் | 05 | 03 |

## மாலைகட்டுப்போட்டி

| இல | மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 01 | கோ.சாச்விகன் | 01 | 01 |
| 02 | ச.சணால் | 01 | 02 |
| 03 | நி.லிபினா | 01 | 03 |
| 04 | நி.அஸ்வின் | 02 | 01 |
| 05 | ச.டிசாளினி | 03 | 01 |
| 06 | கு.லிபர்சினி | 03 | 02 |
| 07 | அ.அபிசன் | 03 | 03 |
| 08 | ற.சஜீவினி | 04 | 01 |
| 09 | கு.லிபர்சனா | 04 | 02 |
| 10 | வி.டெனிஸ்ரன் | 04 | 03 |
| 11 | சு.பிரசாந் | 05 | 01 |
| 12 | கோ.நவீனா | 05 | 02 |
| 13 | ர.வினுஸ்ரன் | 05 | 03 |

## தோரணப்போட்டி

| இல | மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 01 | கு.லிபர்சனா | 04 | 01 |
| 02 | வ.பவிஸ்ணா | 04 | 02 |
| 03 | வி.டெனிஸ்ரன் | 04 | 03 |
| 04 | சு.பிரசாந் | 05 | 01 |
| 05 | ஜெ.கின்ஸ்ரன் | 05 | 02 |
| 06 | ப.சார்மி | 05 | 03 |

## பேச்சுப்போட்டி

01. ச.டிசாளினி தரம் - 03 (1ம் இடம்)

## 2016 ம் ஆண்டிற்கான மாணவர்களின் பாடசாலை வரவு ஒழுங்கு

| தரம் | மாணவர் பெயர் | பாடசாலைக்கு வருகை தந்த மொத்த நாட்கள் |
|---|---|---|
| 01 | நி.அஸ்வின் | 193 |
| 02 | அ.அபிசன் | 194 |
| 02 | ச.டிசாளினி | 194 |
| 02 | கு.திவ்யா | 194 |
| 03 | வ.பவிஸ்ணா | 194 |
| 03 | றோ.வினுசிகா | 194 |
| 03 | வி.விசானுகா | 194 |
| 03 | ற.சஜீவினி | 194 |
| 03 | யு.வைஷ்ணவி | 194 |
| 04 | அ.ஜனுசன் | 195 |
| 05 | ர.நிவேதா | 195 |

### 2016 ஆம் ஆண்டு குறைந்த லீவு பெற்ற ஆசிரியர் விபரம்

01. திருமதி.ரோ.கணபதிப்பிள்ளை

# இணைப்பாடவிதான செயற்பாடுகள் - 2016

| இல | மாணவர் பெயர் | தரம் | நிகழ்வுகள் | குடும்பம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | வி.டெனிஸ்ரன் | 03 | சித்திரப்போட்டி | 3ம் இடம் | | |
| 02 | ஸ்ரீ.டினுசன் | 05 | சித்திரப்போட்டி | 1ம் இடம் | | |
| 03 | சு.பிரசாந் | 04 | 100 சதுரப்பெட்டி | 1ம் இடம் | | |
| 04 | சு.பிரசாந் | 04 | சித்திரப்போட்டி | 1ம் இடம் | | |
| 05 | நி.அஸ்வின் | 01 | அச்சுப்பதித்தல் | 2ம் இடம் | | |
| 06 | ப.கஸ்மி | 02 | அச்சுப்பதித்தல் | 1ம் இடம் | 5ம் இடம் | |
| 07 | குடும்ப ஆரம்பப் பிரிவு மாணவர்கள் | | விநாடி வினாப் போட்டி | 3ம் இடம் | | |
| 08 | வி.டெனிஸ்ரன் | 03 | துரித கணிதம் | | 2ம் இடம் | |

## சாதனையாளர் விபரம் (2017)

| இல | மாணவர் பெயர் | தரம் | விடயம் | குடும்பம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | நி.லிபினா | 01 | திருக்குறள் | 2ம் இடம் | | |
| 02 | நி.அஸ்வின் | 02 | திருக்குறள் | 2ம் இடம் | | |
| 03 | வி.டெனிஸ்ரன் | 04 | திருக்குறள் | 1ம் இடம் | | |
| 04 | *நி.அஸ்வின்* | 02 | துரித கணிதம் | 2ம் இடம | | |
| 05 | *ச.டிசாளினி* | 03 | துரித கணிதம் | 5ம் இடம் | | |
| 06 | வி.டெனிஸ்ரன் | 04 | துரித கணிதம் | 1ம் இடம் | | |
| 07 | சு.பிரசாந் | 05 | துரித கணிதம் | 1ம் இடம் | | |
| 08 | ச.சணால் | 01 | சித்திரம் | 3ம் இடம் | | |
| 09 | நி.அஸ்வின் | 02 | சித்திரம் | 1ம் இடம் | | |
| 10 | ப.கஸ்மி | 03 | சித்திரம் | 2ம் இடம் | | |
| 11 | வி.டெனிஸ்ரன் | 04 | சித்திரம் | 1ம் இடம் | | |
| 12 | சு.பிரசாந் | 05 | சித்திரம் | 3ம் இடம் | | |
| 13 | நி.அஸ்வின் | 02 | சித்திரம் | 1ம் இடம் | 2ம் இடம் | சிறப்புப்பரிசு |
| 14 | சு.பிரசாந் | 05 | **English Dictation** | 3ம் இடம் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | வி.டெனிஸ்ரன் | 04 | சிங்கள விநாடி வினா | 2ம் இடம் | 3ம் இடம் | |
| 16 | வி.விசானுகா | 04 | சிங்கள விநாடி வினா | 2ம் இடம் | 3ம் இடம் | |
| 17 | றோ.வினுசிகா | 04 | சிங்கள விநாடி வினா | 2ம் இடம் | 3ம் இடம் | |
| 18 | வ.பவிஸ்ணா | 04 | சிங்கள விநாடி வினா | 2ம் இடம் | 3ம் இடம் | |
| 19 | ற.சஜீவினி | 04 | சிங்கள விநாடி வினா | 2ம் இடம் | 3ம் இடம் | |
| 20 | நி.அஸ்வின் | 02 | பண்ணிசை குழு | 2ம் இடம் | | |
| 21 | ஜெ.அனோஜன் | 02 | பண்ணிசை குழு | 2ம் இடம் | | |
| 22 | ப.அன்பினி | 02 | பண்ணிசை குழு | 2ம் இடம் | | |
| 23 | சி.பிரசாளினி | 02 | பண்ணிசை குழு | 2ம் இடம் | | |
| 24 | க.டனுஜன் | 04 | பண்ணிசை குழு | 2ம் இடம் | | |
| 25 | வி.டெனிஸ்ரன் | 04 | பண்ணிசை குழு | 2ம் இடம் | | |
| 26 | சு.லதுசன் | 04 | பண்ணிசைகுழு | 2ம் இடம் | | |
| 27 | வ.பவிஸ்ணா | 04 | பண்ணிசைகுழு | 2ம் இடம் | | |
| 28 | றோ.வினுசியா | 04 | பண்ணிசைகுழு | 2ம் இடம் | | |
| 29 | வி.விசானுகா | 04 | பண்ணிசைகுழு | 2ம் இடம் | | |
| 30 | கு.சிந்துஜா | 04 | பண்ணிசைகுழு | 2ம் இடம் | | |
| 31 | ற.சஜீவினி | 04 | பண்ணிசைகுழு | 2ம் இடம் | | |
| 32 | கு.லிபர்சனா | 04 | பண்ணிசைகுழு | 2ம் இடம் | | |
| 33 | ச.டிலஸ்காந் | 05 | சிங்கள விநாடி வினா | 3ம் இடம் | | |
| 34 | ஜெ.கின்ஸ்ரன் | 05 | சிங்கள விநாடி வினா | 3ம் இடம் | | |
| 35 | கோ.நவீனா | 05 | சிங்கள விநாடி வினா | 3ம் இடம் | | |
| 36 | ப.சார்மி | 05 | சிங்கள விநாடி வினா | 3ம் இடம் | | |
| 37 | கே.சஜிந் | 01 | ஆங்கிலப் பாடல் குழு | 2ம் இடம் | | |
| 38 | பி.நிதிஸ் | 01 | ஆங்கிலப் பாடல் குழு | 2ம் இடம் | | |
| 39 | ச.சணால் | 01 | ஆங்கிலப் பாடல் குழு | 2ம் இடம் | | |
| 40 | கோ.சாச்விகன் | 01 | ஆங்கிலப் பாடல் குழு | 2ம் இடம் | | |
| 41 | சி.மதுசாளினி | 01 | ஆங்கிலப் பாடல் குழு | 2ம் இடம் | | |
| 42 | நி.லிபினா | 01 | ஆங்கிலப் பாடல் குழு | 2ம் இடம் | | |
| 43 | நி.அஸ்வின் | 02 | ஆங்கிலப் பாடல் குழு | 1ம் இடம் | | |
| 44 | ஜே.அனோஜன் | 02 | ஆங்கிலப் பாடல் குழு | 1ம் இடம் | | |
| 45 | ப.அன்பினி | 02 | ஆங்கிலப் பாடல் குழு | 1ம் இடம் | | |
| 46 | சி.பிரசாளினி | 02 | ஆங்கிலப் பாடல் குழு | 1ம் இடம் | | |

## எமது பாடசாலையில் இயங்கும் மன்றங்கள்

01. மாணவர் மன்றம்
02. இந்து மன்றம்
03. ஆங்கில மன்றம்
04. கிறிஸ்தவ மன்றம்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS)

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு.சி.நேதாஜி |
| செயலாளர் | - | திருமதி.ப.மாலா |
| பொருளாளர் | - | திருமதி.க.ரமேஸ்குமார் (ஆசிரியர்) |
| வலய இணைப்பாளர் | - | திருமதி.து.ரிச்சட்றேமன் |

## பாடசாலை அபிவிருத்திக் குழு(SDC)

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு.சி.நேதாஜி |
| செயலாளர் | - | திருமதி.ப.மாலா |
| பொருளாளர் | - | திருமதி.க.ரமேஸ்குமார் |
| ஆசிரியர் பிரதிநிதி | - | திருமதி.வ.நவாஸ்சங்கர் |
| | | திரு.அ.சுரேஸ்குமார் |
| **பெற்றோர் அங்கத்தவர்** | - | திருமதி.ச.சிந்துஜா |
| | | திருமதி.ப.மாலா |
| | | திருமதி.நி.சிந்துஜா |
| **பழைய மாணவர்** | - | செல்வி.த.தர்சினி |
| | - | செல்வி.த.ரஜீந்தினி |

# எமது பாடசாலையில் நடை பெறும் விழாக்கள் - 2017

## ➢ கால்கோள் விழா

எமது பாடசாலையின் 11.01.2017 அன்று தரம் 1 மாணவர்களிற்கான கால்கோள் விழாவில் மானிப்பாய் பங்குத்தந்தை S.J.Q ஜெயறஞ்சன் அடிகளார், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி.பி.அம்பிகைபாலன், E-City ஆங்கிலக் கல்வி நிர்வாகி திரு.து.றஜீபன் கலந்து சிறப்பித்தனர்.

## ➢ தைப்பொங்கல்

எமது பாடசாலையின் தைப்பொங்கல் விழா 16.01.2017 அன்று அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் இணைந்து கொண்டாடினார்கள்

## ➢ இல்லமெய்வல்லுநர் போட்டி

இவ்வருடம் 08.02.2017 நடைபெற்ற விளையாட்டுப்போட்டிக்கு பிரதமவிருந்தினராக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி.பாரதி சிவன்சேய் அவர்களும் மானிப்பாய் பங்குத்தந்தை S.J.Q ஜெயறஞ்சன் அடிகளார், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## ➢ சித்திரை புதுவருடப்பிறப்பு

எமது பாடசாலையின் சித்திரை வருடப்பிறப்பினை 27.04.2017 அன்று அதிபர் ஆசிரியர்கள் இணைந்து அனைத்து மாணவர்களிற்கும் கைவிசேஷம் வழங்கி சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

## ➢ ஆடிப்பிறப்பு

எமது பாடசாலையில் ஆடிப்பிறப்பு 17.07.2017 அன்று அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து அன்றைய தினம் ஆடிக்கூழ் காய்ச்சி கொண்டாடினார்கள்.

## ➢ நவராத்திரி விழா

எமது பாடசாலையின் நவராத்திரி விழாவானது ஏடுதொடக்குதல், பூஜைவழிபாடுகள், மற்றும் கலைநிகழ்வுகள் என்பனவற்றுடன்சிறப்பாக நடைபெற்றது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து சிறப்பாகக் கொண்டாடினார்கள். மாணவர்களிற்கு பிரசாதம் வழங்கப்பட்டது

## ➢ உலக சிறுவர் தினம்

அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் 03.10.2017 திகதி சிறுவர் தினம் கொண்டாடப்பட்டதுடன், மாணவர்களிற்குப் போசாக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டன. அத்துடன் ஆசிரியர்களினால் அனைத்து மாணவர்களிற்கும் அன்பளிப்பாக கைக்குட்டைகள் வழங்கப்பட்டதுடன், போட்டிகள் நடாத்தப்பட்டு மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## ➢ ஆசிரியர் தினம்

எமது பாடசாலையின் ஆசிரியர்தினம் 06.10.2017 அன்று பெற்றோர்களால் கொண்டாடப்பட்டது. அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மாணவர்கள் மாலைகள் அணிவித்து கௌரவித்தனர் பெற்றோர்களால் அதிபர், ஆசிரியர்களிற்கு சிற்றுண்டிகள், பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

## ➢ உலக உளவியல் சுகாதார தினம்

19.10.2017 அன்று உலக உளவியல் சுகாதார தினம் கொண்டாடப்பட்டது.அன்றைய தினம் யோகாசனப்பயிற்றுவிப்பாளர் திரு.சக்தி தியாகராஜா மாணவர்களிற்கு மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சியும்,மூச்சுப்பயிற்சியும் வழங்கியதுடன் குறுநாடக மூலம் கல்வியின் அவசியத்தை உணர்த்தும் வகையில் ஆற்றுகையும் வழங்கினார்.

# 2017ம் ஆண்டு பாடசாலைக்கு உதவியோர் விபரம்

- **கால்கோள் விழா**

- பாடசாலை தரம் 1 மாணவர்களுக்கு புத்தகப்பை அன்பளிப்பு
  **திரு .ஜெ. ரஜீவன்** ( E –City ஆங்கிலக்கல்லூரி நிர்வாகி)
  எழுது பொருட்கள் கொப்பிகள் - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
  **திருமதி பி. அம்பிகைபாகன்**

- **விளையாட்டுப்போட்டிக்கு மாணவர்களுக்கான பரிசில்கள்**
  Silver Plate -**திரு.திருமதி ஜெகநாத்** குடும்பத்தினர்(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
- **சிற்றுண்** (Cake) சுபா வெதுப்பகம் (திரு.S.**பேரின்பநாயகம்** )
- **பாடசாலை குப்பை அகற்ற ஏற்றுக்கூலி**
  **(புதுமடம் கர்த்தர்கோயில்,நிர்வாகசபை )**
- தரம் 3,4,5 வகுப்பறை வர்ணம் தீட்டல் பெற்றோர் பங்களிப்பு 22000.00
- பழைய மாணவர் உதவி வர்ணம் தீட்டல் கூலி **திரு.S.சுஜீபன்,3500.00**

- **பாடசாலையின் பழையமாணவர்,நலன்விரும்பிகள் அன்பளிப்புகள்**
  - பிளாஸ்ரிக்கதிரை 04 திரு. செ.கஸ்தூரன் (நலன்விரும்பி)
  - Water Filter 01 திரு.திருமதி.பு.அபிசரா (நலன்விரும்பி)
  - Fan02 திரு.ர.திலீபன் பொறியியலாளர் (பழையமாணவர்)
- **பூச்சாடி** – **செல்வி.மா.தவமணி** (நலன்விரும்பி)
- **நலன்விரும்பிகள் அன்பளிப்புக்கள்** - 13500.00.
- பழைய மாணவர் திரு. பாலசுப்பிரமணியம் **சதீஸ்** (ஆசிரியர்) அனைத்து மாணவர்களிற்கும் எழுதுகருவி உபகரணப் பெட்டிகள் வழங்கியுள்ளார்.
- அமுத நிதியத்தினர் மாணவர்களுக்கும் கொப்பிகள், எழுதுகருவிப் பெட்டிகள் பரிசில்கள் வழங்கியுள்ளனர்.
- People's bank மாணவர்களிற்கு பரிசுப் பொருட்கள் வழங்கியுள்ளனர்.
- திரு.C. ஜெகநாத் குடும்பத்தினர் ஓய்வு பெற்ற தபாலதிபர் பரிசளிப்பு விழாவிற்கு மலர் வெளியிடுவதற்கு உதவிபுரிந்துள்ளார்.
- திருமதி. ே. யோகராணி (நலன்விரும்பி) மாணவர்களுக்கு பிஸ்கட் வழங்கியுள்ளார்.

# STAFF DETAILS

| NO | Name | Service/ Grade | Educational qualification |
|---|---|---|---|
| 01 | Mr.S.Nethaji | SLPS III | B.FA(Art),PGD.Edu |
| 02 | Mrs.K.Rameshkumar | SLTS 2.I | B.ED.SP.Primary Trd |
| 03 | Mrs.V.Navasshangar | SLTS 2.II | B.ED.SP.Primary Trd |
| 04 | Mr.A.Sureskumar | SLTS 2.I | SP.Primary Trd |
| 05 | Mrs.V.Vijinthan | SLTS 2.II | National Dip.in Teaching ( SP. Primary). |
| 06 | Mrs.R.Kanapathippillai | SLTS 2.I | SP.Primary Trd |
| 07 | Mrs.S.Ravichandran | SLTS 2.I | SP.Primary Trd |

## பாடசாலைக் கீதம்

வளர்ந்திடும் புதுமடம் றோ.க. தமிழ்
வனிதையைப் புகழ்ந்திடுவோம் - நாமே வளர்ந்திடும்
இன்பமொழித்தமிழ் இனியவை அருளி
அன்பொடு கற்றுமே உயர்ந்திட நல்கும் - வளர்ந்திடும்.

மாண்புகழ் கொண்டு மாணவர் வளரவே
காண்புறுங் கலைவளம் கருத்துடன் நல்கி
வாண்புகழ் வளர்ந்திடும் வணபிதா பிலிப் பதியில்
வேண்டு நற்சிறப்போடு வளர் றோ. க. தமிழன்னை

செந்தமிலாங்கிலம் சேர்தரு றோ.க. சைவம்
புந்தி நிறைந்திடு பொதறிவொடு சுற்றாடல்
சொந்தமாய் வந்திடும் கணித விஞ்ஞானம்
தந்தெமை வளர்த்திடும் தாயினைப் பணிவோம்

அறிவொளி தந்திடும் இறைவனைப் பணிவோம்
நெறிவழி காட்டும் நம் அதிபரைப் புகழ்வோம்
சிறுமைகள் அகற்றி நல் அறிவுரை கூறும்
அறிஞரைப் போற்றுவம் அன்புடன் நாமே

வாழிய வாழிய றோ.க. தமிழ்ச்சாலை
வாழிய வாழிய அதிபரொடு ஆசிரியர்
வாழிய வாழிய உடுவை நற்பதியே
ஊழி தோறு நூழி உயர்ந்ததென்றும் வாழியவே....

வளர்ந்திடும்..........